# திருச்சி மாநகராட்சியில் நாய்களுக்கு கு.க. செய்வதில் மோசடி

## விலங்குகள் நல அமைப்பு பகீர் புகார்

திருச்சி, ஜூன்.30: திருச்சி மாநகராட்சி பகுதியில் நாய்களுக்கு குடும்ப கட்டுப்பாடு செய்து ஓராண்டு ஆகிறது.பிடிக்கும்நாய்களைஎன்னசெய்கிறார்கள்என தெரியவில்லை. இதில் பெரிய மோசடி நடப்பதாக காருண்யா விலங்குகள் நல அமைப்புநிர்வாகிகள் குற்றம்சாட்டி உள்ளனர்.

திருச்சி மாவட்ட வருவாய் அதிகாரி தர்ப்பகராஜ் நேற்று மக்கள்குறைகேட்புமுகாம்நடத்தினர். அப்போது திருவானைக்காவலை சேர்ந்த காருண்யா விலங்குகள் நல அமைப்பு நிர்வாகிசதீஷ்ஒருமனுகொடுத்தார். அதில் கூறியிருப்பதாவது:

திருச்சி மாநகராட்சியில் நாய்களுக்கு குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து ஓராண்டு ஆகிறது. நாய்களுக்கு கு.க செய்ய தலா ரூ.700 மத்திய அரசுஒதுக்குகிறது.ஆனால்மாநகராட்சி நிர்வாகம் ரூ.441 தான் ஒதுக்குவதாக கூறுகிறது.

மத்திய அரசு ரூ.700 வழங்கும் அரசு ஆணை எம்எஸ் எண் 181 எடுத்துச் சென்று காட்டி, இது தொடர்பாக நகர் நல அலுவலரை சந்தித்துதெரிவித்தபோது, ரூ.441 தான் மாநகராட்சி வழங்கும். அந்த ஆணை பற்றி எங்களுக்குதெரியாதுஎன்கின்றனர். நாய்களுக்குகு.கசெய்வதாககூறி நாய்களை பிடித்துச் சென்று என்ன செய்கின்றனர் எனத்தெரியவில்லை.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்த காருண்யாவிலங்குகள்நலஅமைப்பை சேர்ந்தசதீஷ்,ராகவன் ஆகியோர் கூறியதாவது: திருவானைக்காவல் பகுதியில் 28 தெருக்களில்தெருவுக்கு10வீதம்250க்கும் மேற்பட்ட நாய்கள் உள்ளன. அவற்றில்மோசமானநாய்களை நாங்களே பிடித்து கு.க செய்து பராமரித்துவருகிறோம்.ஆனால் மாநகராட்சிநிர்வாகம் அமைதியாகஉள்ளது.கேட்டால்கணக்கு காட்டுவதற்காக சில நாய்களை பிடித்துச்சென்றுவேறுபகுதியில் இறக்கிவிடுகின்றனர். அவை சாலையில் அடிபட்டு இறந்துவிடுகின்றன.நாய்களை சுருக்குக்கம்பி போட்டு தான் இழுத்துச் செல்கின்றனர். அந்த தழும்புடன் பல நாய்கள் சுற்றுகின்றன. நாய்களுக்கு குடும்பக்கட்டுப்பாடு அறுவைசிகிச்சைசெய்யமத்திய அரசுநாய் ஒன்றுக்குரூ.700வழங்குகிறது. ஆனால், மாநகராட்சி ரூ.441தான் வழங்க முடியும் என்கிறது. மீதம் ரூ.259 பணம் எங்கு போகிறது என தெரியவில்லை. திருச்சி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான நாய்களைபிடித்துகு.க அறுவைசிகிச்சைசெய்துள்ளனர். அதற்கான பட்டியல் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த பட்டியலில் திருச்சி மாநகராட்சியில் ஒரு நாய்க்குக்கூட கடந்தஓராண்டில்கு.கசெய்ததாக கணக்கு காட்டப்படவில்லை. இந்த திட்டத்தில் மிகப்பெரிய மோசடி நடக்கிறது. அதை முறையாக விசாரித்தால் பல உண்மைகள் வெளிச்சத்துக்கு வரும். இவ்வாறு அவர்கள் கூறினர்.



### பூட்டியே கிடக்கும் கு.க., மையம்

நாய்களுக்கு கு.க. செய்யும் மையம் திருச்சி பாலக்கரை பழைய மதுரை ரோட்டில் உள்ளது. அந்த மையம் ஒரு வருடமாக பூட்டியே கிடக்கிறது. எங்கு வைத்து கு.க. செய்கிறார்கள் என தெரியவில்லை.